ரத்தோட்டை பிரதேச சபை - 2023

--------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரத்தோட்டை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரத்தோட்டை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் ' தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் ' தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் ˙ முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டில் களஞ்சிய கடன்கொடுத்தோராக்கப்பட்ட ரூபா 431,999 மீளாய்வதாண்டின் கொடுப்பனவு செய்யும் போது களஞ்சிய கடன்கொடுத்தோர் வரவு வைக்கப்படாமல் நானாவித கடன் கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,483,136 ஆன எழுது கருவிகள் களஞ்சிய கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்க வில்லை | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 135,500 ஆன 05 காணிகள் மற்றும் 7பா 84,350 ஆன 02 கட்டிடங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2. இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களின் காணப்படும் 07 கணக்கு விடயங்களுக்குரிய் மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய அட்டவணைகளின் மீதிகளுடன் ஒப்பிட்ட போது ரூபா 27,644,913 ஆன வேறுபாடு காணப்பட்டது. | தகவல்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | கணக்கு மீதிகள் மீதிகள், சீராக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காணப்படும் ரூபா 792,800 கூட்டுத் தொகையான 09 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 5,257,725 ஆன 04 பொறுப்பு விடயங்களுக்குரிய கோவைகள் மற்றும் பதிவேடுகள் மற்றும் நாளது வரையாகப்பட்ட வருமான பதிவேடு சமர்ப்பிக்கப்படாமை யால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | தகவல்களை இனங் காண்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | ஒவ்வொரு மீதியையும் உறுதிப் படுத்துவதற்கு பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 5 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 405,686 ஆன வியாபார அனுமதிப்பத்திர நிலுவை மீதிகள் அறவிடப்பட்டிருக்க வில்லை. | நீண்டகாலமாக இருந்து வரும் மீதிகளாக இருப்பதால் பதிவேடு களிலிருந்து பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்ககளுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்ககளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பாராளுமன்ற சட்டங்கள் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற நிறுவன (நிறைவேற்றப்பட்ட) உபவிதி சட்டம் | | | |
| (i) | முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தல் தொடர்பான உப விதி | சபை அதிகார பிரதேசத்தில் முச்சக்கர வண்டி நிறுத்து மிடங்களை முறைப்படுத்தல், கட்டுப்படுத்துவதற்கு மற்றும் கட்டணங்களை அறவிடு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்கும் இடங்களை இனங்கண்டு முறைப்படுத்தி கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் | | | |
| | 24 ஆம் பிரிவு | சபையால் பேணிச் செல்லப்படுகின்ற வீதிகள் மற்றும் ஒழுங்கைகளிள் பெயர் பதிவேடொன்று குறிப்பிடப்பட்டு சபைக்குரிய அனைத்து வீதிகளும் உள்ளடக்கப்பட்டு பதிவேடொன்ற நாளதுவரையாக பேணிச் செவல்லப்படவில்லை. | பிரிவு மட்டத்தில் நில அளவையாள ருடன் GPS தொழில் நுட்பத்தின் மூலம் காணி அளவிடப்பட்டு திட்டவரைபடம் தயாரிக்கப்பட்டு வருவதுடன் 2 பிரிவுகளில் காணி அளவீடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் | | | |
| | நிதி பிரமாணம் 571(3) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காலம் கடந்திருந்த ரூபா 1,384,808 ஆன 75 வைப்புக்கள் தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

(இ) சுற்றறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/03 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 1(v) பந்தி | ஜனக தென்னகோன் மாவத்தையில் 6 கடைகளில் ஒரே தடவையில் அறவிடப்படும் பணத்தை தவணை அடிப்படையில் செலுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்த போதும் மத்திய வங்கி வட்டி விகிதத்தின் பேரில் கணக்கிடப்பட்ட வட்டி அறவீட்டை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாகஒரே தடைவ பணம் மற்றும் அதற்கான வட்டி ரூபா 3,141,246 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கோவைகளைப் பரீட்சித்து உரிய கடை உரிமையாளர் களுக்கு ஒரே தடைவ பணத்தை செலுத்துமாறு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டு குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ii) | 2013 ஒக்தோபர் 07 ஆந் திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 02(அ) பந்தி | 8 மணித்தியாலயத்தை பூர்த்தி செய்யாத 21 விடுமுறை நாட்களுக்காக 7 உத்தியோ கத்தர்களுக்கு ரூபா 349,20 விடுமுறை தினப் படிகள் வழங்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் 8 மணிதிதயாலங்கள் கடமையை நிறைவேற்ற ிஉள்ளனரா என பரீட்சித்த பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 5,323,490 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 15,916,268 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,315,000 | 1,415,285 | 1,292,969 | 3,001,907 | 1,315,000 | 1,365,601 | 1,327,818 | 2,879,591 |
| (ii) | வாடகை | 4,639,050 | 5,126,953 | 4,677,613 | 3,970,528 | 4,519,050 | 5,121,628 | 5,556,153 | 3,521,187 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,150,000 | 1,313,800 | 1,313,800 | 406,386 | 970,000 | 1,018,450 | 1,017,750 | 406,385 |
| (iv) | ஏனைய வருமானம் | 3,200,000 | 3,486,153 | 3,621,298 | 10,673,585 | 8,000,000 | 6,807,310 | 8,348,935 | 10,808,730 |
| | | ------------ | ------------ | ------------ | ------------- | ------------- | -------------- | ------------- | ------------- |
| | | 10,304,050 | 11,342,191 | 10,905,680 | 18,052,406 | 14,804,050 | 14,312,989 | 16,250,656 | 17,615,893 |
| | | ======= | ======= | ====== | ======= | ======= | ======== | ======= | ======= |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதவரியும் வரியும்<br>1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 158 ஆம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வீதவரி அலகொன்றில் ரூபா 10,000 இற்கு மேற்பட்ட நிலுவையாக இருக்கும் 34 ஆதனங்களிலிருந்து | நிலுவை வீதவரி மீதிளை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 594,838 ஆன நிலுவை வீதவரி மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய 08 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 59,812,113 ஆக இருந்ததுடன். அதில் அறவிடப்படாது காணப்பட்ட 1 வருடத்தை மேற்பட்ட 5 வருடங்களுக்கு குறைந்த மீதி ரூபா 8,458,542 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 10,397,409 ஆக இருந்தது. | அறவிடப்பட வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுப்பதாக | பெறவேண்டிய வருமானத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 04 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 22,864,441 ஆக இருந்ததுடன் அதில் தீர்வு செய்யப்படாமல் காணப்படும் காலம் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 8,340,991 தொகை தீர்வு செய்யப்பட வில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை 2024 ஆம் ஆண்டில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 2018 ஆம் ஆண்டு முதல் முன்னைய ஆண்டு வரையான காலப்பகுதியில் 4 ஆண்டு காலப்பகுதிக்காக 613 கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் கிடைத்திருந்ததுடன் அதில் 417 விண்ணப்பங்கள் அபிவிருத்தி அங்கீகரிக்கப் பட்டிருந்த போதும் அக்காலப் பகுதியில் 25 இணக்கச் சான்றிதழ்கள் மாத்திரம் வழங்கப் பட்டிருந்தன. அவ்வாறே | கட்டிட விண்ணப்பங்களில் ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய பரிந்துரைகள் இல்லாமை காரணமாக ஒரு பகுதி மாத்திரம் | பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றும் இணக்க சான்றிதழ்களை வழங்குவதற்கும் |

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்படாத 196 விண்ணப்பங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்க முடியாமல் போனதாகவும் இணக்கச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளுமாறு உரியவர்களுக்கு அறிவித்துள்ளதாகவும் . | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடைக் வாடகை உடன்படிக்கையின் 06(I) ஆம் பந்தியின் பிரகாரம் உடன்படிக்கை கையொப்பமிடுவதற்கு முன்னர் குத்தகை யாளரால் சபையில் பிணை வைக்க வேண்டிய போதிலும் ரத்தொட்ட சபையின் உடன்படிக்கை காலம் முடிவடைந்த 38 கடைகளில் மொத்தம் ரூபா 419,602 ஆன பிணை வைப்புக்களும் உடன்படிக்கை தற்போது நடைமுறையில் இருந்து வரும் 58 கடைகளில் மொத்தம் ரூபா 657,250 ஆன பிணை வைப்புக்களும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை குத்தகையாளர் களிடமிருந்து அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணை வைப்புக்களை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | பிணை வைப்புகள் அறவிடப்பட வேண்டும் |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 10 பதவிகளில் 15 வெற்றிடங்களும் ஒரு பதவிக்குரிய 2 மிகையும் காணப்பட்டன. | நிறுவனமயப்படுத்தப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு அனைத்தும் இடை நிறுத்தி உள்ளதாக | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை பேணிச் செல்லல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச் சென்ற, மரணித்த மற்றும் தற்காலிக சேவை நிறுத்தப்பட்டுள்ள 07 உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியிலும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 442,868 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளாமல் 2021 ஆம் ஆண்டில் ரூபா 2,964,803 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த குருவாக சிறுவர் பூங்கா முன்னால் உள்நாட்டு சிற்றுண்டிசாலை 2024 பிப்ரவரி 5 கணக்காய்வு திகதி வரை 8 மாத காலப்பகுதியில் விளைவற்று காணப்பட்டது | புதிய கொள்வனவாளரை பெற்றுக் கொள்வதற்காக கூறுவிலை கோரி விளம்பரம் பிரசித்தபடுத்தப்பட்டிருந்ததுடன் பொருத்தமான கொள்வனவாளர் முன் வந்ததன் பின்னர் கொள்வனவாளருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்களை பயன்பாட்டிற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான ரூபா 31,207,188 பெறுமதியான 04 கட்டிடங்கள் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு விவைற்றும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டது | எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காணி பிரிக்கப்பட்டு விற்பனை செய்யும் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்த 03 காணித் துண்டுகளின் உரித்து கையேற்கப்பட்டு இருக்கவில்லை | 03 காணித் துண்டுகளை உறுதிகள் மூலம் பிரதேச சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | காணிகளின் உரித்தினை கையேற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) சபை பயன்படுத்தும் ரூபா 2,178,044 ஆன 09 காணித் துண்டுகளின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) ரத்தொட்ட பண்டாரபொல தோட்டம், நில்திய தகர பெயருடைய ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்ட காணியில் சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த 01 ஏக்கர் 01 ரூட் 04 பேர்ச் அளவிலான காணிப் பங்கின் உரித்தை கையேற்று தீர்வு செய்திருக்கவில்லை. | இரு தரப்பினரும் சந்தித்து உரிய காணிகளின் உறுதியை பெற்று காணியின் உடமையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உடமையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) காணி பிரிக்கப்பட்டு ஏலவிற்பனை செய்யப்பட்ட இரண்டு காணிகளில் சபைக்கு கைரேயற்ப்பட்டுள்ள 46 பேட்ச் அளவுடன் கூடிய இரண்டு காணி பகுதிகள் தனியார் பயன்பாட்டுக்காக இடமளிக்கப்பட்டு இருந்தது. | தனியார் பயன்படுத்திய பகுதிக்குரிய மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டு அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொது நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடிக் காலம் கடந்த 07 வியாபாரங்கள் சுற்றடால் அனுமதி பத்திரத்தை புதுப்பிக்காமல் இருந்ததுடன் உரிய உத்தியோகத்தர்களால் வெளிக்கள பரிசோதனை மேற்கொண்டு மேற்படி வியாபாரங்கள் மூடப்பட்டு உள்ளதா வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என உறுதிப்படுத்தி இருக்கவில்லை | குறித்த தரப்பினர் அறிலுறுத்தப்பட்டு அது தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக | முறையான கண்காணிப்பாளர் மேற்கொள்ளப்பட வேண்டும் |